(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 178.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2017 யூலை 05 புதன்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

1066/ '16

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை புகையிரத திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட 2015 - 2020 செயற்பாட்டுத் திட்டத்தில் புகையிரத இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்;

(ii) மேற்படி திட்டம் செயற்படுத்தப்படாதெனில், மாற்றுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சர்வதேச போட்டி ரீதியிலான விலைமனுக் கோரலின்றி இந்தியாவிலிருந்து புகையிரத இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்கான திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) இந்தியாவில் புகையிரத இயந்திரங்களை உற்பத்தி செய்கின்ற கம்பனிகளின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iv) சர்வதேச போட்டி ரீதியிலான விலைமனுக் கோரல் மேற்கொள்ளப்படாமை நல்லாட்சி கோட்பாட்டுக்கு அமைவானதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2.

1137/ '16

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— பிரதம அமைச்சரும், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாடு முழுவதிலும் இயங்கிவருகின்ற மாவட்ட மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அவற்றின் தவிசாளர் அல்லது இணைத்தவிசாளர் பதவிகளை வகிக்கின்ற ஆட்களின் பெயர்கள் மற்றும் பதவிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஆட்களில் பாராளுமன்ற அல்லது மாகாண சபை உறுப்பினர்கள் அல்லாத ஆட்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

1185/ '16

கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கிளிநொச்சி மாவட்டத்தில்,

(i) 1983 ஆம் ஆண்டளவில் செய்கைபண்ணப்பட்ட மொத்த விவசாய நிலங்களின் அளவு யாது;

(ii) 1982 மற்றும் 1983 ஆம் ஆண்டுகளில் செய்கைபண்ணப்பட்ட விவசாய நிலங்களின் அளவு ஒவ்வொரு பயிருக்கிணங்கவும் வெவ்வேறாக எவ்வளவு;

(iii) 1983 ஆம் ஆண்டின் பின்னர் 2009 ஆம் ஆண்டில் யுத்தநிலைமை முற்றுப்பெறும்வரை செய்கைபண்ணப்பட்ட மொத்த நிலங்களின் அளவு ஒவ்வோராண்டுக்கிணங்கவும் வெவ்வேறாக எவ்வளவு;

(iv) யுத்தநிலைமை முற்றுப்பெற்ற பின்னர் இற்றைவரை செய்கைபண்ணப்பட்ட விவசாய நிலங்களின் அளவு ஒவ்வோராண்டுக்கிணங்கவும் வெவ்வேறாக எவ்வளவு;

(v) மேற்படி அனைத்தினதும் முழுமையான அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

1299/ '16

கௌரவ டலஸ் அழஹப்பெரும,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மாத்தறை மாவட்டத்தில் அமைந்துள்ள தேசிய மற்றும் மாகாண,

(i) பாடசாலைகளின் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(ii) பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பாடசாலையின் பிரகாரம் எத்தனையென்பதையும்;

(iii) பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பாடத்தின் பிரகாரம் எத்தனையென்பதையும்;

(iv) பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வலயத்திற்கேற்ப எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மாத்தறை மாவட்டத்தின் தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அந்த எண்ணிக்கையானது தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளின் பிரகாரம் தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(iii) மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கிடையிலான விகிதம் ஒவ்வொரு பாடத்தின் பிரகாரம் தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(iv) மேற்படி (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள விகிதமானது கல்வி வலயத்திற்கேற்ப தனித்தனியாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5.

1332/ '16

கௌரவ புத்திக பத்திறண,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மின்சார சபையின் கீழ் லங்கா ட்ரான்ஸ்போமர்ஸ் எனும் பெயரில் நிறுவனமொன்று காணப்பட்டதா;

(ii) மேற்படி நிறுவனத்தின் பெயர் மாற்றப்பட்டுள்ளதா;

(iii) ஆமெனில், இதன் தற்போதைய பெயர் யாது;

(iv) வ/ப எல்ரீஎல் ஹோல்டிங்ஸ் ( தனியார்) கம்பனிக்குச் சொந்தமான பங்குகள் பகிரப்பட்டுள்ள விதம் யாது;

(v) ESOT (நம்பிக்கைப் பொறுப்பு) பங்குதாரர்களிடம் காணப்படும் பங்குகளை நிருவகிப்பது யார்;

(vi) இதன் பங்குதாரர்களின் பெயர்கள் மற்றும் அவர்களிடம் காணப்படும் பங்குகளின் எண்ணிக்கை பற்றிய பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா;

(vii) ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு ஒப்பந்தத்தின் பிரகாரம், இது தாபிக்கப்பட்டு எவ்வளவு காலப்பகுதியில் அவர்களது பங்குகள் குறித்தும் அவர்கள் பங்குதாரர்கள் என்பது பற்றியும் அறிவிக்கப்பட்டுள்ளதா;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ESOT கம்பனியின் ஆரம்ப பங்குதாரர்கள் யார், அவர்களுக்கு உரித்தானதாயிருந்த பங்குகளின் அளவு யாது;

(ii) மேற்படி பங்குதாரர்களில் இலங்கை மின்சார சபையின் ஊழியர்கள் காணப்படுகின்றார்களா;

(iii) ஆமெனில், அவர்களுக்கு பிணைப்பு பற்றிய முரண்பாடு இருப்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) COPE அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் வ/ப எல்ரீஎல் ஹோல்டிங்ஸ் (தனியார்) கம்பனியினால் ரூபா 232 மில்லியன் இலாபப்பங்கு இலங்கை மின்சார சபைக்கு வழங்கப்படவில்லை என்பதை அறிவாரா;

(ii) இது தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

6.

1373/ '16

கௌரவ பந்துல குணவர்தன,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2016 வரவு செலவு திட்டத்தின் 126 வது இலக்க முன்மொழிவின் பிரகாரம், சிறிய மட்டும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களின் சந்தைப்படுத்தல் மேம்பாட்டுக்காக தனியார் துறையினரின் சிறப்புச் சந்தைகளில் அலுமாரித் தட்டுகளில் இடவசதிகள் நியாயமான விலைக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) தனியார் துறையினரின் சிறப்புச் சந்தைகளில் மேற்படி அலுமாரித் தட்டுகளில் இடவசதிகளை ஒதுக்கித் தரும்படி ஏதேனும் அமைச்சினால் கோரப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அத்தகைய கோரிக்கையோ அல்லது கட்டளையோ விடுக்கப்பட்டிருப்பின், அதன் பிரதியொன்றை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iv) இலங்கையில் அமைந்துள்ள வரி அறவிடப்படுகின்ற தனியார்துறை சிறப்புச் சந்தைகளின் எண்ணிக்கையையும் அவை அமைந்துள்ள நகரங்களின்/ கிராமங்களின் பட்டியலொன்றையும் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

1473/ '16

கௌரவ சமிந்த விஜேசிறி,— நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— ( 1 )

(அ) (i) தற்போது நாட்டில் நடைமுறையிலிருக்கும் நாட்டின் அபிவிருத்திக்கு விசேட பங்களிப்பு வழங்கும் பிரதேச ஊடகவியலாளர் அமைப்புக்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அந்த ஒவ்வொரு பிரதேச ஊடகவியலாளர் அமைப்பினதும் அவற்றில் பதவி வகிப்போரினதும் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) இவர்களது வாழ்க்கைத் மட்டத்தை உயர்வதற்கும் அதேபோன்று தொழில் வாழ்க்கையின் மேம்பாட்டுக்காகவும் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

1499/ '16

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்து சட்டத்தின் 23 ஆம் பிரிவுக்கமைய 12 வயதுக்கு குறைந்த முஸ்லிம் சிறுமிகளை திருமணம் முடித்துக் கொடுக்கும் போது காதி நீதிபதிகளின் அங்கீகாரம் பெறப்பட வேண்டுமென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) அதன் பிரகாரம், 12 வயதுக்கு குறைந்த முஸ்லிம் சிறுமிகளை திருமணம் முடித்துக் கொடுக்கும்போது, காதி நீதிபதிகளினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளமை தொடர்பாக அறிக்கையிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், 2010 ஆம் ஆண்டிலிருந்து இற்றை வரை மேற்படி சட்டத்தின் பிரகாரம் அங்கீகாரமளிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை மற்றும் அது தொடர்பான விபரங்கள் ஒவ்வொரு மாவட்டத்துக்கமைய வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்கள்

1.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— உண்ணாட்ரசிறை,— 2017, ஏப்பிறல் 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரி மதிப்பீட்டாண்டுக்காக வருமான வரி விதிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

2.

திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில்பயிற்சி அமைச்சர்,— இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவகம்,— இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவகத்தைத் தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; நிறுவகத்தின் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் குறித்துரைப்பதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

## பிரேரணை முன்னறிவித்தல்

3.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை இலக்கங்கள் 42, 43 மற்றும் 44 என்பவற்றின் ஏற்பாடுகளுக்கமைய, பாராளுமன்றத்தின் இக்கூட்டத் தொடரின் போது இலத்திரனியல் வாக்களிப்பு முறையை உபயோகித்து பாராளுமன்றத்தில் வாக்களிப்பை மேற்கொள்ள இயலுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்,— இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தின் சம்பளம் மற்றும் படிகளில் திருத்தம் மேற்கொள்ளல்,—

1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் 16(1) ஆவது பிரிவினூடாக ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கும் அலுவல்களை நிறைவேற்றும் பொருட்டு அந்த ஆணைக்குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக பணிப்பாளர் நாயகம் ஒருவரை நியமிப்பதற்கும் அப்பதவியை வகிப்பவருக்கு பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படும் சம்பளத்தைச் செலுத்துவதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாதலாலும்;

இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு 2016.11.24 ஆம் திகதியிலிருந்து சட்டமா அதிபர் திணைக்களத்தில் மேலதிக சொலிஷிட்டர் ஜெனரல் பதவியை வகித்த ஜனாதிபதி சட்டத்தரணி திரு. சரத் ஜயமான்ன அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாதலாலும்;

இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகமான ஜனாதிபதி சட்டத்தரணி திரு. சரத் ஜயமான்ன அவர்களுக்கு தனிப்பட்ட வகையில் செல்லுபடியாகும் வண்ணம் மேலதிக சொலிஷிட்டர் ஜெனரல் பதவிக்குரித்தான மாதாந்தச் சம்பளம் மற்றும் அரசாங்கத்தினால் உத்தியோகபூர்வ இல்லமொன்று வழங்கப்படவில்லையாயின் வீட்டு வாடகைக் கொடுப்பனவு உட்பட சகல படிகள் (தொலைபேசிக் கொடுப்பனவு மற்றும் எரிபொருள் கொடுப்பனவு தவிர்ந்த) செலுத்துவதற்கும், இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தின் பதவிக்குரித்தான அமைச்சரவைச் செயலாளருக்குரிய கொடுப்பனவு, தொலைபேசிக் கொடுப்பனவு, எரிபொருள் கொடுப்பனவு என்பவற்றை 2016.11.24 ஆம் திகதி முதல் செலுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாதலாலும்;

அதற்கமைய, 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் 16(2) ஆவது பிரிவுக்கமைய, இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ஜனாதிபதி சட்டத்தரணி திரு. சரத் ஜயமான்ன அவர்களுக்கு அரசாங்கத்தின் திரட்டு நிதியத்திலிருந்து மேலே குறிப்பிடப்பட்ட மாதாந்த சம்பளம் மற்றும் படிகளைச் செலுத்துவதற்கு இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுகிறது.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 2.

வலுக்கட்டாயமாகக் காணாமற்போக்கப்படுதலிலிருந்து எல்லா ஆட்களையும் பாதுகாத்தல் பற்றிய சர்வதேசச் சமவாய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சர்,— வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 139 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 321 ஆம் பிரிவின் கீழ் கொள்கலத்தின் முழு மொத்த திரண்மத்தைச் சரிபார்த்தல் தொடர்பில் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2016 ஓகத்து 11 ஆம் திகதிய 1979/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும், 2017.02.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

கடற்றொழில் நீர்வாழ் உயிரின வளங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 5.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரும்,— கடல்சார் தீழ்ப்புத் தடைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2008 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க கடல்சார் தீழ்ப்புத் தடைச் சட்டத்தின் பிரிவு 6 (உ) மற்றும் பிரிவு 21 உடன் சேர்த்து வாசிக்கப்படும் பிரிவு 51 கீழ் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2016 திசெம்பர் 06 ஆம் திகதிய 1996/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.06.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 6.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழான விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2017 மார்ச்சு 28 ஆம் திகதிய 2012/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.06.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 7.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2017 மார்ச்சு 28 ஆம் திகதிய 2012/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.06.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 8.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.3),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2017 மார்ச்சு 31 ஆம் திகதிய 2012/52 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.06.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 9.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.4),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2017 மே 08 ஆம் திகதிய 2018/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.06.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 10.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.5),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2017 மே 19 ஆம் திகதிய 2019/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.06.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 11.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்,— சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் இறக்குமதி தீர்வைகள் தொடர்பில் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2017.06.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(2017 பெப்ரவரி 16 ஆம் திகதிய 2006/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 12.

இலங்கை நிலைபெறுதகு அபிவிருத்திச் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2017, மார்ச்சு 08) [1].

* 13.

வெளிநாட்டுச் செலாவணி சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 14.

நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 15.

சுகததாச தேசிய விளையாட்டுகள் கட்டிடத்தொகுதி அதிகாரசபை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 16.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 17.

குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 18.

சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர்,— தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபைச் சட்டத்தின் 118 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 142 ஆவது பிரிவின் கீழ், மருத்துவ உபகரணங்கள் விலை குறித்தல் தொடர்பாக சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2017 பெப்புருவரி 17 ஆம் திகதிய 2006/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.05.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 19.

பௌத்த அறநிலையங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 20.

தேரவாத பிக்குமார்கள் கதிகாவத் (பதிவு செய்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 21.

அரசியலமைப்பின் கீழ் பிரேரணை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2016 யூன் 22),— “இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம், தேர்தல் ஆணைக்குழுவினால் 2016 பெப்புருவரி 25 ஆம் திகதிய 1955/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், 2016.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான, மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டு நெறிகள் அங்கீகரிக்கப்படுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 22.

நீதி அமைச்சரும் புத்தசாசன அமைச்சரும்,— நீதித்துறைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 60 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும், சட்டத்தின் 61 ஆம் பிரிவின் கீழ், நீதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2017 மாச்சு 27 ஆம் திகதிய 2012/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2017.05.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

23.

இலங்கை ஆளணி முகாமை நிறுவகம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

24.

சிறுவர் புனர்வாழ்வு மையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

25.

இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

26.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

27.

மொணறாகல மாவட்ட கான்த்தா மஹா சங்கமய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

28.

லசாலியன் சமூக கல்விச் சேவைகள் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

29.

சர்வதேச பெண்கள் மற்றும் பிள்ளைகளின் உரிமைகள் பேரவை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

---

[1] “சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

---